**22.12.15**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் மண் பரிசோதனை முகாம்**

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் மண் பரிசோதனை முகாம் நடைபெற்று வருகிறது. சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதிகளில் விவசாயம் பிரதானத் தொழிலாக உள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக நல்ல மழை பெய்ததன் காரணமாக விவசாயிகள் புத்துயிர் பெற்றுள்ளனர். மண்ணில் இருந்து கிடைக்கும் ஊட்டச்சத்து, பயிருக்கு ஏற்ற உர வகைகள், மண்ணின் உவர் மற்றும் களர் தன்மை, அதற்கேற்ற பயிரைத் தேர்வு செய்து, அதிக மகசூல் பெறுவதற்கு மண் பரிசோதனை செய்வது அவசியம் ஆகும். தரிசாக இருந்த நிலங்களை தயார் செய்ய வேளாண்மை அலுவலர்கள் அறுவுத்தலின்படி மண் பரிசோதனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரை, சுல்தான்பேட்டை ஒன்றியம் முழுவதும் 2,500 விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரி எடுக்கப்பட்டு, கோவை மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பபட்டுள்ளது. தொடர்ந்து இப்பணியில் சுல்தான்பேட்டை வேளாண்மை துறை அலுவலர்கள், அட்மா திட்ட ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**தரமற்ற விதைகள் விற்போர் மீது கடும் நடவடிக்கை: விதை ஆய்வு துணை இயக்குநர்**

தரமற்ற விதைகள் விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் ஜி.அண்ணாதுரை எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை அதிக அளவில் பெய்ததைத் தொடர்ந்து பயிர் சாகுபடிப் பரப்பு அதிகரித்துள்ளது. அதனால், விவசாயிகள் மத்தியில் விதைகள் தேவையும் அதிகரித்துள்ளது. வட மாவட்டங்களில் தற்போது நெல் விதையின் தேவை அதிக அளவில் அதிகரித்துள்ளது. தரமான விதைகள் உரிய நேரத்தில் கிடைக்க விதைச் சான்றுத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விதை ஆய்வு துணை இயக்குநர் தலைமையில் விதைச் சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர்கள் அடங்கிய குழுவினர், விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். நெல் விதை விற்பனை நிலையங்களில் எடை அளவு, விதைப் பரிசோதனை முடிவுகள், விவர அட்டை போன்ற உரிய ஆவணங்களுடன் விற்பனை செய்யப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். தாராபுரம் பகுதியில் அதிக அளவில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை விற்பனை நிலையங்கள் உள்ளதால் சிறப்புக் குழு ஆய்வு மேற்கொண்டது.

அப்போது, 54 விதை மாதிரிகள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டுள்ளன. உரிய ஆவணங்களின்றி இருப்பு வைக்கப்பட்டிருந்த 4 லட்சம் மதிப்புள்ள 14 டன் நெல் விதைகளை விற்பனை செய்யத் தாற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. விதிமுறைகளை முறையாகப் பின்பற்றாத 2 விதை சுத்திகரிப்பு நிலையங்களின் உரிமம் தாற்காலிமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. தாராபுரம் பகுதியில் உள்ள விதை விற்பனை நிலையங்கள் மீது 12 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

தாராபுரம் பகுதியிலிருந்து இதுவரை 30,000 மெட்ரிக் டன் விதைகள் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விதிகளை மீறும் விதை விற்பனை நிலையங்கள் மீது விதைச் சட்டத்தின்படி மிகக்

கடுமையான நடவடிகை எடுக்கப்படும் என்றார். விதைச் சான்று உதவி இயக்குநர் எஸ்.சின்னசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சேவூரில் ரூ. 33 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 33 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்து குறைந்து மொத்தம் 1,960 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,800 முதல் ரூ. 5,240 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 4,150 முதல் ரூ. 4,600 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ. 3,300 முதல் ரூ. 3,670 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 33 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 11 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன் பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 500 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

**சபரிமலைக்கு 12 டன் காய்கறிகள்**

சபரிமலை அன்னதானத்துக்கு புன்செய் புளியம்பட்டி ஐயப்ப பக்தர்கள் சார்பில் 12 டன் காய்கறிகள் திங்கள்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன.

புன்செய் புளியம்பட்டி ஐயப்ப பக்தர்கள் சார்பில் ஆண்டுதோறும் சபரிமலை அன்னதானத் திட்டத்துக்கு காய்கறிகள் வழங்கப்படுவது வழக்கம். இதன்படி, இந்த ஆண்டு தக்காளி, கேரட், முள்ளங்கி ,உருளைக்கிழங்கு, பூசணி, இஞ்சி, பூண்டு, வெங்காயம், மிளகாய் என மொத்தம் 12 டன் காய்கறிகள் லாரி மூலம் சபரிமலைக்கு அனுப்பி

வைக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை பந்தளராஜா யாத்திரைக் குழுவினர் செய்திருந்தனர்.

**பூச்சி நோய் மேலாண்மைப் பயிற்சி**

பவானிசாகர் வட்ட "அட்மா' திட்டம் சார்பில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மைப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

பவானிசாகர் வேளாண் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு பவானிசாகர் வேளாண்மை உதவி இயக்குநர் க.உமாபதி தலைமை வகித்தார். இதில், விவசாயிகளுக்கு நேரடியாக நெல் வயலில் பூச்சி நோய் கணக்கெடுப்பு, நன்மை, தீமை செய்யும் பூச்சிகள் ஆகியவை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் அ.மாரிமுத்து, வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜெர்லின் ஆகியோர் நெற்பயிரைத் தாக்கும் பூச்சி, நோய்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் என்.கே.ஈஸ்வரமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகள் செய்திருந்தனர்.

**வெள்ளத்தால் கால்நடைகளுக்கு நோய் பாதிப்பு இல்லை:மாவட்ட கால்நடை மருத்துவ அலுவலர்**

வேலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் கால்நடைகளுக்கு நோய் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என மாவட்ட கால்நடை மருத்துவ அலுவலர் மனோகரன் தெரிவித்தார்.

அரக்கோணத்தை அடுத்த சயனபுரத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தினர் நடத்திய சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் அவர் தெரிவித்ததாவது:

வேலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளானது அரக்கோணம் வட்டம் என்பதால், மாவட்டத்தில் அரக்கோணம் வட்டம்

சயனபுரம் ஊராட்சியில் இந்த முகாம் நடத்தப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது, மின் கம்பிகளை மிதித்தது, இடி தாக்கியது போன்ற வகைகளில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் 24 மாடுகளும், 30 ஆடுகளும் இறந்துள்ளன. எனவே வேலூர் மாவட்டத்தை பொருத்தவரை கடந்த மூன்று மாதங்களாக 107 கால்நடை முகாம்கள் நடத்தப்பட்டு கால்நடைகளை பருவகால நோய்கள் தாக்காத வண்ணம் தடுப்பூசிகள் போடப்பட்டன. இந்த நடவடிக்கையினால் வெள்ளபாதிப்பு காலங்களில் கால்நடைகளுக்கு நோய் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றார் மனோகரன்.

அரக்கோணத்தை அடுத்த சயனபுரம் ஊராட்சி மந்தைவெளி மைதானத்தில் நடைபெற்ற முகாமுக்கு வேலூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவர் சரஸ்வதி தலைமை வகித்தார். அரக்கோணம் எம்எல்ஏ சு.ரவி முகாமை தொடக்கி வைத்தார். முகாமில் 1,500 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சையும், 1,080 கால்நடைகளுக்கு தடுப்பூசியும், 285 கால்நடைகளுக்கு தனுவாசு தாது உப்புக் கலவையும், 102 கோழிகளுக்கு குருணை தடுப்பூசியும் அளிக்கப்பட்டது. மேலும் 200 கால்நடைகளின் உரிமையாளர்களிடம் கால்நடைகளுக்கான பசுந்தீவன புல்கட்டுகள் வழங்கப்பட்டன. முகாமில் மாநில அளவிலான கால்நடை மருத்துவ நிபுணர்கள் பலர் பங்கேற்றனர்.

**தருமபுரியில் டிச.30-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரியில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் டிசம்பர் 30-ஆம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 30-ஆம் தேதி (புதன்கிழமை) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. முன்னதாக, அன்றைய தினம் காலை 10 மணிக்கு விவசாயிகள் அறியும் வகையில் வேளாண்மைத் துறை

மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் கருத்துக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இக்கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தமான தங்களது குறைகளையும், கருத்துக்களையும் தெரிவித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வரும் 28-இல் மண்வளம் குறித்த இலவச பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 28-ஆம் தேதி காலை 9 மணிக்கு மண்வளமே பயிர்களின் உயிர் நாடி என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெற உள்ளது. இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இப் பயிற்சியில் மண் வளம், மண் வளத்தைக் கண்டறியும் வழிமுறைகள், மண் வளத்தை மேம்படுத்தும் உத்திகள், சிறப்பான மண் வளத்தால் பயிர்களில் ஏற்படும் நன்மைகள், மண் வளத்துக்கேற்ற சமச்சீர் உரமிடுதல் குறித்த தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படும். இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளோர் நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவோ வரும் 27-ஆம் தேதிக்குள் பெயரை கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோழிப்பண்ணை அமைக்க 51 குழுக்களுக்கு மானியம்

கரூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை அமைக்க 51 குழுக்களுக்கு ரூ. 16.52 லட்சம் மானியத்தொகையை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வழங்கினார். கரூர் ஆட்சியரகக் கூட்டரங்கில் தமிழ்நாடு கால்நடைப்

பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்து, பயனாளிகளுக்கு காசோலையை வழங்கிப் பேசியது:

கரூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் மாநில கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோழிப்பண்ணைகள் அமைக்க கடந்த 16 மற்றும் 30-ம் தேதிகளில் 36 யூனிட்களுக்கு மானியத்தொகையாக ரூ.11.66 லட்சத்திலான காசோலைகள் வழங்கப்பட்டன.

மேலும் கரூர் கோட்டத்திற்குட்பட்ட 36 குழுக்களுக்கு கோழிப்பண்ணை அமைக்க குழுவுக்கு ரூ. 32,375 வீதம் மொத்தம் ரூ.11.66 லட்சத்திலான காசோலை, குளித்தலை கோட்டத்திற்குட்பட்ட 15 குழுக்களுக்கு தலா ரூ. 32,375 வீதம் ரூ. 4.86 லட்சத்திலான காசோலை என மொத்தம் 51 குழுக்களுக்கு ரூ. 16.52 லட்சத்தில் மானியத் தொகை காசோலைகள் வழங்கப்படுகின்றன என்றார்.

நிகழ்ச்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## டிச. 29-ல் விவசாயிகள் குறைகேட்பு முகாம்

புதுக்கோட்டையில் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் வரும் 29-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் மேலும் தெரிவித்திருப்பது:

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில், ஆட்சியர் சு. கணேஷ் தலைமையில் நடைபெறும் இந்த முகாமில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் விவசாயம் தொடர்பான கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்க உள்ளனர். எனவே, மாவட்ட விவசாயிகள் இதில் பங்கேற்று விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை மட்டும் தெரிவித்து பயன்பெறலாம்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் டிச. 24-ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. அன்றைய நாளில் அரசு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் டிச. 30-ம் தேதி காலை 10 மணியளவில் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பண்ணைக் கழிவு மேலாண்மைப் பயிற்சி**

அட்மா திட்டத்தின் கீழ் திருவோணம் வட்டாரம் - தளிகைவிடுதி கிராமத்தில் பண்ணைக்கழிவு மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு சனிக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி திருவோணம் ஒன்றியக் குழுத் தலைவர் ராமாமிர்தம் ராஜமாணிக்கம் தலைமையிலும், திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். மதியரசன் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில், கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், சாகுபடிக்குப் பின்னர் பண்ணைக்கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் தீமைகள், அறுவடைக்குப் பிறகு கரும்பு, சோளம், நிலக்கடலையின் கழிவுகளை மறுசுழற்சி முறையில் உரமாக பயன்படுத்தக்கூடிய முறைகள், மண்புழு உரம் தயாரிக்கும் முறை மற்றும் அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்து பட்டுக்கோட்டை ஈ.ஐ.டி பாரி நிறுவன கரும்பு ஆலை நாற்றாங்கால் உற்பத்தி சிறப்பு அலுவலர் செந்தில் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள், உரமிடும் முறை, பூச்சி நிர்வாகம், நெற்பயிரின்

சாகுபடி தொழில்நுட்பங்கள், தேவையறிந்து உரமிடும் முறை, எள் சாகுபடி தொழில்நுட்பங்கள், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், நிலக்கடலை பயிருக்கு ஜிப்சமிடுதல், அதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள் ஆகியன குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். மதியரசன் கூறினார்.

பயிற்சியின்போது நிலக்கடலை, உளுந்து, எள் பயிருக்கு டிரைக்கோடெர்மா விரிடி, ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்தல் ஆகியவை குறித்து வேளாண் அலுவலர் கே. முருகேசன், பகுதி வேளாண்மை உதவி அலுவலர் சரவணன் ஆகியோர் செய்து செயல்விளக்கம் மூலம் செய்து காட்டினர்.

தளிகைவிடுதி ஊராட்சித் தலைவர் கமலம் பொன்முத்துவேல், ஊராட்சித் துணைத் தலைவர் பரிமளா ஆகியோர் பேசினர். பயிற்சியில் கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது.

**"ரப்பர் விவசாயிகள் மானியம் பெற 31-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்'**

ரப்பர் விவசாயிகள் ரப்பர் நடவுக்கான மானியம் பெற இம்மாதம் 31ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து, மார்த்தாண்டம் ரப்பர் வாரிய அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ரப்பர் விவசாயிகளுக்கு ரப்பர் நடவு செய்ய ரப்பர் வாரியம் மானியம் அளித்து வருகிறது. 25 சென்ட் முதல் 5 ஹெக்டேர் வரை ரப்பர் நடவு செய்யும் விவசாயிகள் மானியம் பெற தகுதியுள்ளவர்களாவர். இதில், அதிகபட்சமாக முதல் 2 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும். இவ்வருடம் ரப்பர் நடவு செய்த விவசாயிகள் இதற்கான விண்ணப்பத்துடன், ரப்பர் நடவு செய்த இடத்தின் வரைபடத்தின் 2 நகல்,

வங்கிக் கணக்கு புத்தகத்தின் 2 நகல் இணைத்து, வரும் 31ஆம் தேதிக்குள் மார்த்தாண்டம் ரப்பர் வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மானியத் தொகை, ஒரு ஹெக்டேருக்கு ரூ. 25 ஆயிரம் வழங்கப்படும். இதற்கான விண்ணப்படிவம், ரப்பர் வாரியம் மார்த்தாண்டம், குலசேகரம், குழித்துறை அலுவலகங்களில் கிடைக்கும். மேலும் ரப்பர் வாரிய இணையதளத்திலிருந்தும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோகம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்துறை சார்பில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கும் விழா கல்குணம் கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (கோவை) துணை வேந்தர் கு.இராமசாமி தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் கல்குணம் விவசாயிகள் 350 பேருக்கு புதிய நெல் ரகமான "கோ:51' விதை 4,000 கிலோ, பாலூர்-2 கத்திரி 10,000 நாற்றுகள், பாலூர் பலாக்கன்றுகள் 100 மற்றும் விவசாய இடு பொருள்களை வழங்கினார். நிகழ்ச்சில் கு.இராமசாமி கூறியது: மழையால் சேதமடைந்த பயிர்கள் குறித்து கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. பாதிப்புகளை கருத்தில்கொண்டு, விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளது என்றார். வேளாண்மை இணை இயக்குநர் க.இளங்கோவன் கூறுகையில், மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக முதல் முறையாக பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் ரூ.45 கோடி பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.39 கோடி விவசாயப் பயிர்களுக்கும், ரூ.6 கோடி தோட்டக்கலைப் பயிர்களுக்கும் வழங்கப்படும். இத்தொகை 33 சதவீதத்திற்கு மேல் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட உள்ளது. மேலும், விவசாயப் பயிர்களுக்கு ரூ.20

கோடியும், தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.4 கோடியும், மண் அரிப்பு மற்றும் மேடானதை சரி செய்ய ரூ.7 கோடியும் ஒதுக்கப்பட உள்ளது என்றார்.

**சூரிய மின்சக்திக்கு முக்கியத்துவம் தேவை:பிரதமர் மோடி**

பருவநிலை மாற்றம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் பிரச்னைகளை எதிர்கொள்ள சூரிய மின்சக்திக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மாசுபாட்டை எதிர்கொள்வது ஒரு சவாலாக உருவெடுத்திருக்கிறது என்றும் அவர் கூறினார். நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் பயணிப்பதற்காக சூரிய மின்சக்தியில் இயங்கக் கூடிய பேருந்தை, மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜனிடம், மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் பரிசாக வழங்கியுள்ளது.

அந்தப் பேருந்தை பிரதமர் நரேந்திர மோடி திங்கள்கிழமை கொடியசைத்து தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த சில ஆண்டுகளாக சுற்றுச்சூழலின் எதிர்மறையான தாக்கம் சாதரண மக்களிடமும் எதிரொலித்து வருகிறது.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதுதான் மனிதகுலத்துக்கு உள்ள மிகப் பெரிய சவாலாகும்.

சூரியக் கதிர்கள் மூலம் ஆண்டு ஒன்றில் 300 நாள்களுக்கு 122 நாடுகள் பலனடைந்து வருகின்றன. இந்நிலையில், அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து புதிய முயற்சியை தொடங்கியுள்ளன.

இதன்படி, பசுமைக்கு வித்திடும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும், சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான சர்வதேசக் கூட்டமைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் புதிய

முயற்சிக்கு பில்கேட்ஸ் அறக்கட்டளையும் ஒத்துழைப்பு அளிக்கவுள்ளது. மேலும், புதிய கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் தில்லியில் அமையலாம்.

அண்மையில் நடைபெற்ற பாரீஸ் பருவநிலை மாநாட்டில் கூட, "மாசில்லா எரிசக்தியை உருவாக்குவோம்' என்ற ஒப்பந்தத்தை உலக நாடுகளின் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கட்கரிக்குப் பாராட்டு: சூரிய மின்சக்தியில் இயங்கக் கூடிய பேருந்தை பரிசளித்திருப்பதன் மூலம், சுற்றுச்சூழலையும், மாசில்லா தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கு மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தனது பங்களிப்பை அளித்துள்ளார்.

சூரிய மின்சக்தியில் இயங்கும் தொழில்நுட்பத்தை பொதுப் போக்குவரத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதுபோன்ற பேருந்துகள் சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், இளம் தலைமுறையினர் சூரிய மின்கலன்களை தயாரிப்பதற்கு ஊக்கமளிப்பதாகவும் அமையும்.

சூரியசக்தியை சேமிக்கக் கூடிய மின்கலன்களை உருவாக்க "இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டத்தின்படி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்போது நமது நாடு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உலகும் இதன் மூலம் பயனடையும் என்றார் மோடி.

மாநில அரசுப் பேருந்துகள் மின்சாரமயம்

மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 1.5 லட்சம் பேருந்துகளை சூரிய மின்சக்தியில் இயங்கும் தொழில்நுட்பத்துக்கு மாற்ற வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது என்று மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

முதல்கட்டமாக மகாராஷ்டிரம், கர்நாடகம், தில்லி உள்ளிட்ட மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் 20 சூரிய மின்சக்தி பேருந்துகளை வழங்க அந்த அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து நிதின் கட்கரி மேலும் பேசியதாவது:

பொதுமக்களுக்கு சுத்தமான காற்று கிடைக்க வேண்டும் என்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது. ஏற்கெனவே டீசலில் இயங்கி வரும் வாகனங்களை சூரிய மின்சக்தி தொழில்நுட்பத்துக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சூரிய மின்சக்தி பேருந்து ஒன்றை இயக்குவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 48,000 கிலோ அளவுக்கு கரியமில வாயு வெளியேறுவதைத் தடுப்பதுடன், டீசலுக்கு ஏற்படும் செலவில் ரூ.10 லட்சம் வரை சேமிக்க முடியும் என்றார் அவர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு மண் வள அட்டை**

வாலாஜாபாத் : விவசாயிகளுக்கு மண் வள அட்டை மற்றும் பயிற்சி கையேடுகளை, வேளாண் துறை அதிகாரிகள் வினியோகம் செய்தனர்.

வாலாஜாபாத்தில், நேற்று காலை, 11:00 மணி அளவில் நடந்த, மண் வள அட்டை வழங்கும் முகாமிற்கு, உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் எம்.பத்மாவதி தலைமை தாங்கினார். வாலாஜாபாத் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஜி.லதாபானுமதி முன்னிலை வகித்தார். முகாமில், காஞ்சிபுரம் மாவட்டத்தின், 13 வட்டாரங்களைச் சேர்ந்த, 60

விவசாயிகளுக்கு, பயிற்சி கையேடு மற்றும் மண் வள அட்டைகள் வினியோகம் செய்யப்பட்டன. முகாமில், 'அட்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர் எஸ்.கலியபெருமாள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**சரணாலயத்தில் 20,000 மரக்கன்று உற்பத்தி**

மொடக்குறிச்சி: முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அடுத்தாண்டுக்கான, 20 ஆயிரம் மரக்கன்றுகளை ஈரோடு மாவட்ட வனத்துறையினர் உற்பத்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து ஈரோடு வனச்சரகர் முருகேசன் கூறியதாவது: அடுத்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை, வெப்ப சலனத்தால் பொழியும் பருவமழைக்கு வனத்துறையினர் மரக்கன்றுகளை நடத் தயாராக இருக்க வேண்டும். அதற்கான உத்தரவுகளை அரசு அறிவிக்கும். அதற்கான முன்னேற்பாடுகள் தான் இவை. தற்போது வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில், 20 ஆயிரம் மரக்கன்று உற்பத்தி செய்யும் பணி நடந்து வருகிறது. இதில் வேம்பு, மலைவேம்பு, அரசு, பதானி, பிய்யன், புங்கன், புதிய வகையான சிங்கப்பூர் மரக்கன்று என பல வகைகள் உள்ளன. தற்போது அரை அடி உயரம் மரக்கன்றுகள் வளர்ந்துள்ளன. ஏழு அடி வரை வளரும் பட்சத்தில் மரக்கன்றுகளை வைத்தால் செழிப்பாக வளரும். திடீரென பல்லாயிரம் மரக்கன்றுகளை வாங்குவது கடினம். அதனால் ஈரோடு வனத்துறை முன்னெச்சரிக்கையாக செயல்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கோழி அபிவிருத்தி திட்டம்: 51 குழுவுக்கு நிதி வழங்கல்**

கரூர்: கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம், 51குழுக்களுக்கு கோழிப்பண்ணைகள் அமைக்க, 16 லட்சத்து, 52 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலையினை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார். கரூர் கலெக்டர் அலுவலக சிறுகூட்டரங்கில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோழிப்பண்ணை அமைக்க மானியத்தொகை

வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் ஜெயந்தி, பயனாளிகளுக்கு காசோலை வழங்கி தெரிவித்ததாவது: கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் மாநில கோழி அபிவிருத்தி திட்டத்தில், கோழிப்பண்ணைகள் அமைக்க கடந்த நவம்பரில், 36 யூனிட்களுக்கு மானியத்தொகையாக, 11 லட்சதது, 66 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலை வழங்கப்பட்டது. கரூர் கோட்டத்திற்குட்பட்ட, 36 குழுக்களுக்கு கோழிப்பண்ணை அமைப்பதற்காக தலா, 32 ஆயிரத்து, 375 ரூபாய் வீதம் மொத்தம், 11 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலையும், குளித்தலை கோட்டத்திற்குட்பட்ட, 15 குழுக்களுக்கு மானியத்தொகையாக தலா, 32 ஆயிரத்து, 375 ரூபாய் வீதம், 4.86 லட்சம் ரூபாய் மதிப்பிலான காசோலை என, மொத்தம், 51 குழுக்களுக்கு, 16 லட்சத்து, 52 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மானியத்தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குளிர் சீசன் துவங்கியது: கறிக்கோழி விலை 20 நாளில் ரூ. 24 உயர்வு**

நாமக்கல்: குளிர் சீசன் துவங்கியதால், கடந்த, 20 நாளில், கறிக்கோழி விலை, கிலோவுக்கு, 24 ரூபாய் வரை, உயர்ந்துள்ளதால், அதன் உற்பத்தியை, 10 சதவீதம் அதிகரிக்க பண்ணையாளர்கள் முடிவு செய்துள்ளனர். தமிழகத்தில், தினமும், எட்டு லட்சம் கிலோ கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. பண்ணை கொள்முதல் விலையை, பல்லடத்தில் உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்புக்குழு (பி.சி.சி.,) சார்பில் தினமும் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த புரட்டாசி மாதம் கறிக்கோழி நுகர்வு வெகுவாக குறைந்தது. அதன் எதிரொலியாக, கறிக்கோழி விற்பனை

மந்தமாகி, பண்ணைக்கொள்முதல் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. வடக்கே கடுங்குளிர்: கடந்த, செப்டம்பர், 26ம் தேதி, கறிக்கோழி விலை, கிலோ, 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து, நான்கு நாட்கள் அதேவிலை நீடித்தது. அதை தொடர்ந்து, இரண்டு நாட்களில், கிலோவுக்கு, 13 ரூபாய் குறைந்து விலை சரிவு ஏற்பட்டு, 60 முதல், 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், கார்த்திகை முடிந்துள்ளதாலும், வடமாநிலங்களில் கடும் குளிர் காலம் என்பதாலும், கனமழையால் பாதிக்கப்பட்ட, சென்னை உள்ளிட்ட வடமாவட்டங்களில் கறிக்கோழி விற்பனை சூடுபிடித்துள்ளதாலும், அதன் விலை படிப்படியாக உயர்ந்து, தற்போது, ஒரு கிலோ, 78 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த, 1ம் தேதி, 54 ரூபாயாக இருந்த கறிக்கோழி, நேற்று, 78 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த, 20 நாளில், 24 ரூபாய் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. உற்பத்தியை அதிகரிக்க முடிவு: இதுகுறித்து, தமிழ்நாடு முட்டைக் கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியன் கூறுகையில், "தமிழகத்தில், கறிக்கோழி விலை தொடர்ந்து கடுமையாக சரிந்து வந்ததால், 20 சதவீதம் உற்பத்தி குறைக்கப்பட்டது. தற்போது, வடமாநிலங்களில் குளிர் காலம் என்பதால் நுகர்வு அதிகரித்துள்ளது. அதனால், 10 சதவீதம் உற்பத்தியை அதிகரிக்க கறிக்கோழி பண்ணையாள்கள் முடிவு செய்துள்ளனர். இந்த விலை உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

**மண்வளமே பயிரின் உயிர்நாடி: டிச., 28ல் பயிற்சி முகாம்**

நாமக்கல்: 'வரும், 28ம் தேதி, மண்வளமே பயிர்களின் உயிர் நாடி என்ற தலைப்பில் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 28ம் தேதி, காலை, 9 மணிக்கு, 'மண்வளமே பயிர்களின் உயிர் நாடி' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இம்முகாமில், மண் வளம், மண்வளத்தை கண்டறியும் வழிமுறைகள், மண்வளத்தை மேம்படுத்தும் உத்திகள், சிறப்பான மண் வளத்தினால் பயிர்களில் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கப்படுகிறது. மேலும், மண்வளத்திற்கு ஏற்ற சமச்சீர் உரமிடுதல் குறித்தும் எடுத்து கூறப்படுகிறது. அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ, வரும், 27ம் தேதிக்குள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பாசனத்திற்கு போலீஸ் பாதுகாப்புடன் தண்ணீர் திறப்பு**

அரூர்: அரூர் அடுத்த கே.ஈச்சம்பாடி அணையில் இருந்து, கடைமடை பாசனத்திற்கு நேற்று முதல் போலீஸ் பாதுகாப்புடன் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் அரூர் அடுத்த கே. ஈச்சம்பாடி அணையில் இருந்து, கடந்த மாதம், 4ம் தேதி முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், 41 கிராமங்களைச் சேர்ந்த, 6,250 ஏக்கர் பாசன வசதி பெறும் என, பொதுப்பணித்துறை தெரிவித்திருந்தது. இந்நிலையில், கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் வரவில்லை என, அப்பகுதி விவசாயிகள் குற்றம் சாட்டினர். மேலும், கடைமடை பகுதிக்கு தண்ணீர் திறந்து விடக்கோரி விவசாயிகள் கடந்த, 18ம் தேதி தர்மபுரி கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு தே.மு.தி.க.,வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன் தலைமை வகித்தார். அவர், வலது மற்றும் இடது புற கால்வாயில் உள்ள கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் வந்து, 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனவே, கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு வர பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்தார். இந்நிலையில், பொதுப்பணித்துறையினர் கம்பைநல்லூர் போலீசில் புகார் செய்தனர். அதில், இடது புற கால்வாயில் உள்ள பெருமாள்நாயக்கனூர், மேட்டுத்தாங்கல் உள்ளிட்ட இடங்களில், ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் கால்வாயை சிலர் உடைப்பதாக தெரிவித்திருந்தனர். மேலும், கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் செல்ல போலீசார் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என, கேட்டனர். இதையடுத்து, நேற்று முதல் கடைமடை பகுதிகளுக்கு போலீஸ் பாதுகாப்புடன் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மழைக்கால நோய்களை குணமாக்கும் மருந்துகள்**

கனமழையால் ஏற்பட்ட குளிர், மழையில் நனைவது போன்றவற்றால் தலையில் நீர்கோர்த்து தலைவலி வருகிறது. ஈரமான காற்றை சுவாசிப்பதால் தலைபாரம் இருக்கும். மூக்கடைப்பு, நீர்கோர்வை பிரச்னைகளுக்கான மருந்து தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: விரலி மஞ்சள், விளக்கெண்ணெய். அகல் விளக்கில் விளக்கெண்ணெய் ஊற்றி விளக்கேற்ற வேண்டும். பின்னர், மஞ்சளை

நெருப்பில் காட்டும்போது அதிலிருந்து புகை வெளிவரும். இந்த புகையை மூக்கின் ஒவ்வொரு நாசியிலும் தலா ஐந்து முறை சுவாசிக்கும் போது மூக்கடைப்பு, தலைவலி சரியாகும். அதிக நேரம் ஈரத்தில் இருப்பது, மழையில் நனைவது, அடிக்கடி தலைக்கு நீர் ஊற்றி குளிப்பது, பனியில் இருப்பது போன்றவற்றால் மூக்கடைப்பு, தலைவலி ஏற்படுகிறது. சளி பிடிக்காமல் இருக்க மஞ்சள் அற்புதமான மருந்தாக விளங்குகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட மஞ்சள், நோய் நீக்கியாக பயன்படுகிறது. மூக்கடைப்புக்கு காரணமாக சளியை மஞ்சள் கரைக்கிறது. சுவாசத்தை சீர்படுத்துகிறது.ஜலதோசம், நீர்க்கோர்வை ஆகியவற்றை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: தும்பை இலை, பூக்கள், அதிமதுர பொடி, தேன். ஒருபிடி தும்பை இலை மற்றும் பூக்கள் எடுத்துக் கொள்ளவும். அதனுடன் அரை ஸ்பூன் அதிமதுர பொடி சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடித்தால் சளி பிரச்னை தீரும். தலைபாரம் தணிந்து போகும். தலைவலி இல்லாமல் போகும்.சளி பிடிப்பதை தடுப்பதில் தும்பை முக்கிய பங்கு வகிக்கிறது. தும்பை பூக்களை எண்ணெயில் இட்டு, சிறிது அரிசி, மிளகாய் துண்டு சேர்த்து காய்ச்சி குழந்தைகளுக்கு தலையில் தேய்ப்பதால் சளிப்பிடிப்பது தடுக்கப்படும். வெற்றிலையை பயன்படுத்தி ஜலதோஷத்துகான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெற்றிலை, மிளகு, சீரகம், தேன்.3 வெற்றிலைகளை துண்டுகளாக எடுத்துக் கொள்ளவும். இதனுடன் 10 மிளகு, ஒரு ஸ்பூன் சீரகம் சேர்க்க வேண்டும். ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும்.இதை வடிகட்டி தேன் சேர்த்து குடிக்கவும். இது ஜலதோஷ பிரச்னையை தீர்க்கிறது. நீண்ட நேரம் மழையில் நனைந்தது, ஈரப்பதத்தில் வாழ்வது போன்றவற்றால் ஏற்படும் சளி, தலைபாரம் போன்றவற்றுக்கு இந்த தேனீர் மருந்தாகிறது. குழந்தைகளுக்கு இதில் பாதி அளவுக்கு பொருட்கள் சேர்த்து தயாரிக்காவும். வெற்றிலை

பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. வெற்றிலை வாயு பிரச்னையை தீர்க்க கூடியது. சளியை கரைக்கும் தன்மை உடையது. உடலுக்கு உஷ்ணத்தை தரக்கூடியது.

**விவசாயிகள் குறைத் தீர்க்கும் கூட்டம்**

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் வீரராகவ ராவ் தலைமையில் நடந்தது. அப்போது, தற்போது பெய்துள்ள கனமழையினால்; குளங்கள், ஏரிகளில் நீர் நிரம்பியுள்ளன. மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டு வந்த சம்பா நெற்பயிர் மற்றும் இதர பயிர்களும் மழை வெள்ளத்தால் 33 சதவீதத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டுள்ளது.ஒரு வருடத்திற்கு பெறப்படும்; சராசரி மழையான 1152.8 மிமீ மழைக்கு பதிலாக ஒரே மாதத்தில் வருடத்திற்கு தேவையான சராசரி மழை 1187.57 மிமீ மழை பெய்துள்ளது. மழை வெள்ளத்தால் வீடுகள், பாலங்கள், கட்டிடங்கள் மற்றும்; கால்நடைகளும் அதிகளவில் சேதமடைந்துள்ளன. வீடுகள் பாதிப்பு அடைந்தவர்களுக்கு ரூ5,000, வீட்டுக்குள் தண்ணீர் புகுந்திருந்தால் ரூ5,000, நெல் மற்றும் இதர பயிர்களுக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ13,500, பல ஆண்டு பயன்தரக்கூடிய மரங்களான மா, சவுக்கு போன்றவற்றிற்கு ஒரு ஹெக்டருக்கு ரூ18,000, மானாவாரி பயிருக்கு ஹெக்டருக்கு 4,710 வீதம் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிவாரணத் தொகை வழங்கப்படும்.நிவாரணத் தொகை வழங்க கணக்கெடுக்கும் பணி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறுகிறது. கணக்கெடுப்பு பணி நிறைவுற்றதும், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை சேர்க்கப்படும். பயிர் கடனுக்காக இத்தொகை கழிக்கப்பட மாட்டாது. பயிர் காப்பீடு செலுத்திய விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டிற்கு ஏற்ப காப்பீடு நிறுவனம் மூலம் இழப்பீடு தொகை வழங்கப்படும். நீர் வரத்து கால்வாய் மற்றும் ஏரி ஆக்கிரமிப்புகளை

அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.மாவட்டத்தில் கனமழை காரணமாக கிடைக்க பெற்றுள்ள நீரை சேமிக்க தடுப்பணைகள் கட்டவும், இந்த நீரைக் கொண்டு பயிர் செய்ய தேவையான விதைகள். உரங்கள் வழங்கிடவும் ஏரிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர்வரத்து கால்வாய்களை சீர் செய்யவும், ஏரிகளில் மழைநீர் தேங்கும் வண்ணம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து மனுக்களை கலெக்டர் பெற்றுக் கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.முத்து, வேளாண்மை இணை இயக்குநர் ப.முருகவேல், தனித்துணை ஆட்சியர் (சமூகநலம்) டி.ஆர்.மல்லிகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கே.பாபு, அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண் பல்கலை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்**

குறிஞ்சிப்பாடி: குறிஞ்சிப்பாடி அடுத்த கல்குணம் கிராமத்தில் தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது. குறிஞ்சிப்பாடி பகுதியில் கடந்த ஒரு மாதமாக பெய்த கனமழையினால் நெல் உள்ளிட்ட விவசாய பயிர்கள் முற்றிலும் அழிந்து நாசமாகி விட்டது. இதனையடுத்து நேற்று கல்குணம் கிராமத்தில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, மாவட்ட ஆட்சியர் சுரேஷ்குமார் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 4000 கிலோ கோ 51 நெல்விதைகள், பத்தாயிரம் கத்தரி நாற்றுகள் மற்றும் நூறு பலா மரக்கன்றுகள் வழங்கினர்.இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தனி அலுவலர் கோவை பாஸ்கரன், கடலூர் வேளாண்மை இணை இயக்குனர்

இளங்கோ, பேராசிரியர் அனீசாராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பிரசாரம்**

மயிலம், : மயிலம் அடுத்த கூட்டேரிப்பட்டு பகுதியில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் நெல் நடவு இயந்திரங்களுக்கு அரசு மானிய திட்டம் குறித்த விழிப்புணர்வு பிரசாரம் நடந்தது.தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை மூலம் தமிழக அரசு விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் கருவிகளை மானிய விலையில் வழங்கி வருகிறது. அதேபோல் தற்போது இயந்திரம் மூலம் நெல் நடவு மேற்கொள்வதால் கிடைக்கும் மகசூல் மற்றும் வேலை பளு குறைவு ஆகியவற்றை விவசாயிகளுக்கு விளக்குதல், விவசாயிகள் மத்தியில் இயந்திர நடவு இயந்திரத்தை பயன்படுத்தும் முறை குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த இயந்திரத்திற்காக அரசு சார்பில் வழங்கப்படும் மானியம் குறித்து மயிலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கூட்டேரிப்பட்டில் சந்தை பகுதி, நான்கு முனை சந்திப்பு ஆகிய இடங்களில் விழிப்புணர்வு பிரசாரம் நடந்தது. இதனை தொடர்ந்து விழுப்புரம் பஸ் நிலையத்திலும் இயந்திரம் குறித்த செயல்விளக்கம் நடந்தது. இதில், விழுப்புரம் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் அமுதன், உதவி பொறியாளர்கள் பழனிவேலு, குருமூர்த்தி, முருகன், ராஜேந்திரன், ஜெயராமன், முரளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோழிப்பண்ணை அமைக்க மானியத்தொகை**

கரூர், : கரூர் மாவட்ட கால்நடைபராமரிப்புத்துறை மூலம் மாநில கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கோழிப்பண்ணைகள் அமைக்க கரூர் கோட்டத்திற்குட்பட்ட 36 குழுக்களுக்கு கோழிப்பண்ணை அமைக்க தலா ரூ.,32,375 வீதம் மொத்தம் ரூ.11.66 லட்சம் மதிப்பிலான காசோலை, குளித்தலை கோட்டத்திற்குட்பட்ட 15 குழுக்களுக்கு மானியத்தொகை ரூ.4.86லட்சம் மதிப்பிலான காசோலையும், என மொத்தம் 51

குழுக்களுக்கு ரூ.16.52 லட்சம் மானியதொகையை கலெக்டர் ஜெயந்தி அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.

**புரதசத்து பற்றாக்குறையை போக்கிட பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யுங்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை**

சேதுபாவாசத்திரம். : புரதச்சத்து பற்றாக்குறையை போக்கிட அதிக பரப்பில் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி ஆலோசனை வழங்கியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஆலோசனை: புரத சத்து பற்றாக்குறையை போக்கிட உளுந்து, பச்சை பயறு, துவரை போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்க வேண்டும். இவ்வகை பயிர்களை தனிப்பயிராகவோ, பிற பயிர்களுடன் ஊடு பயிராகவோ, கலப்பு பயிராகவோ, வரப்பு பயிராகவோ பயிரிட்டு மகசூலை அதிகரிக்க செய்ய வேண்டும். சராசரியாக நாளொன்றுக்கு தனிமனிதன் ஒருவருக்கு 85 கிராம் புரத சத்து தேவைப்படுகிறது. இந்த சத்து உளுந்து, பாசி பயறு, துவரை, தட்டை பயறு, மொச்சை, கொண்டக் கடலை, பட்டாணி, போன்ற பயறு வகை பயிர்கள் மட்டுமே கொடுக்கிறது. நாளொன்றுக்கு தற்போது 36.5 கிராம் புரத சத்து மட்டுமே நமக்கு கிடைக்கிறது. 48.5 கிராம் பற்றாக்குறை ஏற்படுகிறது. இக்குறையினை போக்கிட பயறு வகை பயிர்களை அதிகம் சாகுபடி செய்ய வேண்டும். என்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

**திருவாரூர் மாவட்டத்தில் மழையால் சேதமடைந்த நெற்பயிர்களை ஜி.கே.வாசன் பார்வையிட்டார்**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் மழையால் பாதித்த நெற்பயிர்களை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் நேற்று பார்வையிட்டார். முத்துப்பேட்டை எல்லையான கள்ளுக்குடி, பாண்டி

பகுதிகளில் கட்சியின் கொடியை ஏற்றி வைத்துவிட்டு குன்னலூர் முதல் எக்கல், கடம்பவிளாகம், பண்ணைப்பொது வரை உள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டார். பின்னர் கடம்பவிளாகம் கிராமத்தில் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது அங்கு கூடியிருந்த பெண்கள், ஜி.கே.வாசனிடம் மீண்டும் முன்பிருந்ததுபோல் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் வேலை வழங்க வேண்டும். குன்னலூர் முதல் எக்கல் வரை உள்ள பழுதடைந்த சாலையை சீரமைக்க வேண்டுமெனகோரிக்கை விடுத்தனர். மாநில நிர்வாகி சுரேஷ் மூப்பனார், பட்டுக்கோட்டை எம்எல்ஏ ரங்கராஜன், மாநில செயலாளர் செந்தில் பாண்டியன், மாவட்ட தலைவர் குடவாசல் தினகரன், மாவட்ட இளைஞரணி தலைவர் காமராஜ், விவசாய பிரிவு மாவட்ட தலைவர் சந்திரசேகரன், மாவட்ட துணைத்தலைவர்கள் ஜீவானந்தம், குன்னலூர் தினகரன் மற்றும் பலர் உடனிருந்தனர். இதைதொடர்ந்து நாகை மாவட்டத்துக்கு ஜி.கே.வாசன் சென்றார்.வேதாரண்யம்: நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகாவில் மழையால் பாதிக்கப்பட்ட தகட்டூர் ஊராட்சி தெக்காட்சிகாடு பகுதியை ஜி.கே.வாசன் பார்வையிட்டார். அப்போது அவரிடம் அழுகிய பயிர்களை விவசாயிகள் காண்பித்தனர். பின்னர் எங்களுக்கு நிவாரணம் தேவையில்லை. வடிகால் வாய்க்கால்களை தூர்வாரினாலே போதும் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். இதைதொடர்ந்து ஜி.கே.வாசனிடம் விவசாயிகள், பெண்கள் கோரிக்கை மனு அளித்தனர். மாநில செயற்குழு உறுப்பினர்கள் சுரேஷ் மூப்பனார், சுதாகர் மூப்பனார், நாகை தெற்கு மாவட்ட தலைவர் பிரபு, நாகை மாவட்ட மேற்பார்வையாளர் நல்லமுத்து மற்றும் பலர் பங்கேற்றனர்.

**கோழிப் பண்ணைகள் லாபத்தில் இயங்க வேண்டுமா?**

நாட்டுக்கோழி பண்ணைகள் அதிக லாபத்தில் இயங்க வேண்டுமென்றால் நோய் பாதிப்பு இல்லாமல் இருக்க வேண்டும். உயிர் பாதுகாப்பு முறையான நோய் பாதுகாப்புகளை குறைத்து அதன் மூலம் அதிக லாபத்தை உண்டாக்கும் முறையாகும். இதற்கு நோய் கிளர்ச்சி மற்றும் நோயினால் ஏற்படும் பொருளாதார நஷ்டத்தை நன்கு அறிந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் நோய் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்தி பண்ணையில் வேலை செய்பவர்கள் அனைவரையும் கை,கால்களை நன்கு கழுவிய பின் பண்ணைக்குள் அனுமதிக்க வேண்டும்.பண்ணையில் திடீர் நோய் தாக்குதல் ஏற்பட்டால் முதலில், இறந்த கோழிகளை மிகவும் பத்திரமாக அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீரில் கிருமி நீக்க மருந்தை கலந்து நாட்டு கோழிகளுக்கு கொடுக்க வேண்டும். பண்ணை முழுவதும் கிருமி நாசினியை தெளிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பண்ணையில் பணிபுரியும் வேலையாட்களை, இதர நோயுற்ற பண்ணைகளில் பணிபுரிய அனுமதிக்க கூடாது. அயர்ச்சியை நீக்கும் உயிர்சத்து ஈ மற்றும் சி போன்றவற்றினை நாட்டு கோழிகளுக்கு அதிகளவில் வழங்க வேண்டும். பழைய ஆழ்கூளத்தை அப்புறப்படுத்த வேண்டும்.பண்ணையில் எலி தொல்லை இல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும். நோய்க்கான தகுந்த காரணத்தை உடனே கண்டறிந்து உரிய சிகிச்சையளிக்க வேண்டும். மாதம் ஒரு முறை நோய் எதிர்ப்பு திறனை அறிந்து தகுந்த தடுப்பூசி அளிக்க வேண்டும். கோழிக்குஞ்சுகள் பண்ணைக்கு வரும் முன் புதிய பண்ணையாக இருந்தால் சுத்தம் செய்து கற்சுண்ணாம்பு கொண்டு வெள்ளையடிக்க வேண்டும். பழைய பண்ணையாக இருந்தால் கோழிகளை விற்பனை செய்த பின் எருவை எடுப்பதற்கு முன் பண்ணையின் உட்புரம் மற்றும் வெளிப்புரங்களில் பூச்சிக்கொல்லி மருந்தினை பரிந்துரைத்த அளவில் அடிப்பதால் பூச்சிகள் அழிக்கப்படும்.

**திருந்திய நெல் சாகுபடியில் தொழில்நுட்பங்கள்**

பழநி, : திருந்திய நெல் சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். திருந்திய நெல் சாகுபடிக்கு வேளாண்துறையினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு விதை, உரம், மருந்து உட்பட பல்வேறு பொருட்களை 100% மானியமாக வழங்கி வருகின்றனர். இந்நிலையில் திருந்திய நெல் சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி கூறியதாவது, தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் அல்லது வீரிய ஒட்டு நெல் ரகங்களை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 2 கிலோ விதைகளை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 1 சென்ட் நாற்றாங்கால் இருந்தாலே போதுமானது. இதன் மீது பாலிதீன் விரிப்புகளை பயன்படுத்தி மரச்சட்டங்களை அமைத்து, மேட்டுப் பாத்திகள் அமைத்து அதில் மக்கிய தொழுஉரம் 9:1 வீதம் பரப்பி விதைக்க வேண்டும். 14 நாட்கள் வயதான நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். சரியான இடைவெளிக்கு மார்க்கர் கருவிகளை பயன்படுத்த வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமப்படுத்த வேண்டும். 22.5 சென்டி மீட்டர்*22.5 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்துக்கு ஒரு நாற்று மட்டும் நடவு செய்ய வேண்டும். நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 சென்டி மீட்டருக்கு அதிகமாக நீர் நிறுத்த கூடாது. கோனோவீடர் கொண்டு களை எடுக்க வேண்டும். நடவு செய்த 10ம் நாள் முதல், 10 நாட்களுக்கு ஒருமுறை களை எடுக்க வேண்டும். உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியா போன்றவற்றை ஏக்கருக்கு தலா 7 பாக்கெட் வீதம் இட வேண்டும். பச்சை இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான தழைச் சத்தினை மேல் உரமாக இட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**வெள்ளம் பாதித்த பயிர்களுக்கு வங்கி கணக்கு மூலம் இழப்பீடு**

விருதுநகர்,: தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக பெய்த வடகிழக்குப் பருவமழையால் சென்னை, கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்ட சேதங்கள் பற்றி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.உயிரிழப்புகளுக்கு தலா ரூ.4 லட்சம் அவர்களது குடும்பத்தினரிடமும், குடிசை வீடுகள், கான்கிரீட் வீடுகள் சேதமடைந்தால் சேதத்தின் தன்மைக்கு ஏற்ப பயனாளிகளிடம் நேரில் வழங்கப்பட்டன.இந்நிலையில் விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை நெல் மற்றும் பாசனநில பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.13,500ம், மானவாரிப் பயிர்களுக்கு ரூ.7,410 அளிக்கப்பட உள்ளன. பயிர்ச் சேதங்கள் பற்றி வேளாண் அதிகாரிகள் வருவாய்த்துறையினரிடம் அளிக்கும் நிலப் பரப்பளவுக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரும் நாட்களில் வரவுவைக்கப்பட உள்ளதாக பேரிடர் தகவல் மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சாகுபடி பணிகளில் விவசாயிகள் மும்முரம்**

சிவகாசி, : விருதுநகர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாகப் பருவமழை சரிவரப் பெய்யாததால் விவசாயப் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டது. தற்போது வடகிழக்குப் பருவமழை மாவட்டம் முழுவதிலும் தீவிரமாகப் பெய்து வருகிறது. திருவில்லிபுத்தூர் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக அதிகபட்சமாக 13 செ.மீ வரை மழை பெய்தது. இந்த மழைக்கு சிவகாசி தாலுகாவில் உள்ள செவலூர், கொத்தனேரி, எரிச்சநத்தம், வெள்ளூர், குமிழங்குளம் உட்பட பல கண்மாய்கள் நிரம்பின. இதேபோன்று மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் வடகிழக்குப் பருவமழை தீவிரமாகப் பெய்ததால், மாவட்டத்தில் உள்ள பிளவக்கல், கோல்வார்பட்டி, வெம்பக்கோட்டை,

குல்லூர் சந்தை, இருக்கன்குடி, கோவிலாறு அணைகளும் நிரம்பியுள்ளன. இதனால் சிவகாசி ஒன்றியம், வெம்பக்கோட்டை ஒன்றியப் பகுதியில் சாகுபடிப் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சிவகாசி தாலுகாவில் மானாவாரி விவசாயத்தில் 4 ஆயிரத்து 931 ஹெக்டேர் நிலப்பரப்பில் 56 வகையான பயிர் சாகுபடி செய்துள்ளனர். இதே போன்று நீர் பாய்ச்சும் நிலத்தில், 2 ஆயிரத்து 600 ஹெக்டேர் நெல், 79 ஹெக்டேர் சோளம், 95 ஹெக்டேர் கம்பு, 474 ஹெக்டேர் மக்காச்சோளம், 124 ஹெக்டேர் பாசிப் பயறு, 1279 ஹெக்டேர் கரும்பு பயிர் சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ளனர். வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு போதிய அளவில் பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி முத்துசாமி கூறுகையில், “தென்மேற்குப் பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயப் பணிகள் பாதிப்படைந்தன. தற்போது வட கிழக்குப் பருவ மழை தீவிரமாகப் பெய்து வருகிறது. இதனால் மானாவாரி நிலங்களைச் சீர்செய்து நெல் சாகுபடி செய்யும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம்” என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முத்துகவுண்டனூரில் தடுப்பணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிணத்துக்கடவு, முத்துகவுண்டனூரில் உள்ள தடுப்பணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>வரட்டாறு</u>

கிணத்துக்கடவு பகுதியில் உள்ள சொக்கனூர் வழியாக வரட்டாறு செல்கிறது. இந்த ஆற்றில் பருவ மழைக்காலங்களில் கோவை பகுதியில் உள்ள ஒத்தகால்மண்டபம், கண்ணம்மநாயக்கனூர் உள்பட பல்வேறு கிராமங்களில் பெய்யும் மழைநீர் சொக்கனூரில் உள்ள வரட்டாறு வழியாக கேரளாவுக்கு செல்கிறது. இதனால் சொக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லாமல் இருந்ததது.

இதனால் முத்துகவுண்டனூரில் தடுப்பணை கட்ட வேண்டும் என்று ஊராட்சி தலைவர் மணிமுருகேசன் கிணத்துக்கடவு தொகுதி எம்.எல்.ஏ. தாமோதரனிடம் கோரிக்கை விடுத்தார். இதன்பேரில் ரூ.80 லட்சம் செலவில் தடுப்பணை கட்டடப்பட்டது. இதனை தமிழக முதல்– அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2014–ம் ஆண்டு திறந்து வைத்தார்.

<u>தடுப்பணை நிரம்பியது</u>

கிணத்துக்கடவு மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையின் காரணமாக இந்த தடுப்பணை நிரம்பியது. இதனால் முத்து கவுண்டனூர், சொக்கனூர் பகுதியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இந்த நிலையில் தாமோதரன் எம்.எல்.ஏ., ஊராட்சி தலைவர் மணிமுருகேசன்,

ஒன்றிய குழு உறுப்பினர் குயில்சாமி, அ.தி.மு.க. பேரூராட்சி கழக செயலாளர் மூர்த்தி, சொக்கனூர் கூட்டுறவு வங்கி தலைவர் ரங்கராஜ் ஆகியோர் இந்த தடுப்பணையை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:– தமிழக அரசின் உத்தரவின் பேரில் முத்துகவுண்டனூரில் 6 ஏக்கர் பரப்பளவில் தடுப்பணை கட்டப்பட்டது. இதனால் சொக்கனூர், முத்துகவுண்டனூர், ரங்கேகவுண்டன் புதூர், கோவிந்தநாயக்கனூர், வீரப்பகவுண்டனூர், பாலார்பதி, பெரும்பதி, மூலக்கரை உள்பட 15–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. தற்போது தடுப்பணை 2–வது முறையாக நிரம்பியுள்ளதால் நிலக்கடலை, கத்திரிக்காய், மக்காச்சோளம், தக்காளி, பொறியல் தட்டை, வெண்டை உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**தொப்பையாறு, நாகாவதி ஆறுகளின் குறுக்கே தற்காலிக பாலங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்தது**

கம்மம்பட்டி, மத்தாளப்பள்ளம் பகுதிகளில் தொப்பையாறு மற்றும் நாகாவதி ஆறுகளின் குறுக்கே தற்காலிக பாலங்கள் அமைக்கும் பணி முடிவடைந்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆபத்தான பயணம்

தர்மபுரி மாவட்டம் நாகாவதி, தொப்பையாறு அணைகள் சமீபத்தில் நிரம்பியது. இதனால் இந்த 2 அணைகளில் இருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டது. இதனால் நாகாவதி அணைக்கு தண்ணீர் வரும் ஆற்றை ஒட்டி அமைந்துள்ள மத்தாளப்பள்ளம், தொப்பூர் தொப்பையாற்றில் இருந்து தண்ணீர் வெளியேறி செல்லும் ஆற்றை ஒட்டியுள்ள கம்மம்பட்டி காட்டுவளவு பகுதிகளை சேர்ந்த மாணவ-மாணவிகள், பொதுமக்கள் தண்ணீரில் இறங்கி ஆபத்தான பயணம் மேற்கொண்டு வந்தனர்.

இந்த பகுதிகளை கலெக்டர் விவேகானந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது கம்மம்பட்டி, மத்தாளப்பள்ளம் 2 இடங்களிலும் தற்காலிக நடைபாலம் அமைக்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார். இதையடுத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் ஸ்ரீதர், உதவி கலெக்டர் ராமமூர்த்தி, நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் புகழேந்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சரவணன், மாதப்பன் உள்ளிட்டோர் தற்காலிக பாலம் அமைக்கும் இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பொதுமக்கள் மகிழ்ச்சி

தொப்பையாறு குறுக்கே கம்மம்பட்டி காட்டுவளவு பகுதியில் சுமார் 13 மீட்டர் நீளத்திற்கு 12 சிமெண்டு குழாய்களை கொண்டு தற்காலிக பாலமும், நாகாவதி ஆற்றின் குறுக்கே மத்தாளப்பள்ளம் பகுதியில் 26 மீட்டர் நீளத்திற்கு 29 சிமெண்டு குழாய்களை கொண்டு பாலமும் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்றது. இந்த பணிகள் முடிவடைந்து தற்காலிக பாலங்கள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விடப்பட்டது. இந்த பாலங்கள் வழியாக அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், மாணவ-மாணவிகள் பாதுகாப்பாக பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், பொதுமக்கள் மற்றும் மாணவ-மாணவிகள் நலன் கருதி கம்மம்பட்டி, மத்தாளப்பள்ளம் பகுதிகளில் தொப்பையாறு, நாகாவதி ஆறுகளின் குறுக்கே தற்காலிக பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலங்கள் மீது மண் கொட்டப்பட்டு, பாதுகாப்பிற்கு கம்புகள் கட்டப்பட்டுள்ளது. கனமழை பெய்ததால் ஆறுகளில் நீர்வரத்து அதிகரிக்கும் போது இந்த 2 பாலங்களும் சேதமடைந்து விடும். இதனால் நிரந்தரமாக கான்கிரீட் பாலங்கள் அமைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது இந்த பகுதிகளில் தற்காலிக பாலம் அமைக்கப்பட்டுள்ளதால்

பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.28 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை**

அந்தியூர்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.28 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

<u>விவசாய விளைபொருட்கள்</u>

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு அந்தியூர், எண்ணமங்கலம், அத்தாணி, ஆப்பக்கூடல், ஒலகடம், பர்கூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் விவசாய விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது.

மொத்தம் 40 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 2 ரூபாய் 70 காசுக்கும், பெரிய தேங்காய் 10 ரூபாய் 20 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய் 20 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.4 ஆயிரத்து 618 முதல் ரூ.5 ஆயிரத்து 705 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.35 ஆயிரத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை செய்யப்பட்டது.

<u>ஆமணக்கு</u>

வெள்ளை எள் 300 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 519 முதல் ரூ.7 ஆயிரத்து 569 வரை ஏலம் எடுக்கப்பட்டது. மொத்தம் ரூ.17 லட்சத்துக்கு எள் விற்பனை

செய்யப்பட்டது.

ஆமணக்கு 2 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 500 முதல் ரூ.3 ஆயிரத்து 619 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.5 ஆயிரத்துக்கு ஆமணக்கு விற்கப்பட்டது.

மக்காச்சோளம் 400 மூட்டைகள் கொண்டு வரப்பட்டதில், (குவிண்டால்) ரூ.1,251 முதல் ரூ.1,333 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு மக்காச்சோளம் விற்பனை செய்யப்பட்டது.

ரூ.28 லட்சத்துக்கு விற்பனை

நிலக்கடலை 1,000 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் நிலக்கடலை (காய்ந்தது) (குவிண்டால்) ரூ.3 ஆயிரத்து 651 முதல் ரூ.5 ஆயிரத்து 400 வரை ஏலம் போனது. நிலக்கடலை (பச்சை) (குவிண்டால்) ரூ.1,619 முதல் ரூ.2 ஆயிரத்து 401 வரை ஏலம் விடப்பட்டது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு நிலக்கடலை விற்பனை செய்யப்பட்டது.

நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் ரூ.27 லட்சத்து 90 ஆயிரத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. சேலம், நாமக்கல், திருப்பூர், மேட்டுப்பாளையம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்த வந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்து சென்றனர்.